VETRI

# வள்ளலார் வாக்கில் துதித்தல்

## சன்மார்க்கம் அறிவோம் - பாடம் 2


தொகுப்பு

முனைவர் வை. நமசிவாயம், VETRI



வெளியீடு

வள்ளலார் யூனிவர்சல் மிஷன், U.S.A

மற்றும்

வள்ளலார் கல்விப்  பயிற்சி ஆராய்ச்சி நிறுவனம், வடலூர் (VETRI)

Contents

வள்ளலார் வாக்கில் துதித்தல் ..... 5
1. துதித்தல் ..... 5
2. வள்ளலார் எங்கு கூறியுள்ளார் ..... 5
சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம் ..... 5
சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம் ..... 5
6-107. ஞானசரியை (வாய்பறை ஆர்த்தல்) ..... 6
3. ஏன் துதித்தல் ..... 7
ஆன்மாவின் சிற்றறிவால் கடவுளின் பேரறிவை அளக்க இயலாது ..... 7
1-005-49 மகாதேவ மாலை ..... 7
திருமந்திரம் / பாயிரம் / 6. அவை அடக்கம் / #95 ..... 8
6-003-4 அருட்பெருஞ்சோதி அட்டகம் ..... 8
6-081-14 தோழிக் குரிமை கிளத்தல் ..... 8
4. ஆதலால் “துதிப்பதுவே நலம்” ..... 8
6-092-7 இன்பத்திறன் ..... 8
திருவாசகம் / திருச்சதகம் / அறிவு உறுத்தல் / 16 ..... 9
5. துதிப்பவரே அருள் பெறத் தகுதியுடையவர் ..... 9
6-002-307 அருட்பெருஞ்ஜோதி அகவல் ..... 9
திருமந்திரம் / ஏழாம் தந்திரம் / 11. சிவபூசை / #1824 ..... 9
6. துதிப்பவருக்கு என்ன தகுதி? ..... 9
சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம் ..... 10
7. எதனைத் துதிப்பது ? ..... 10
சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம் ..... 10
8. கடவுளின் அருட்குணமே பெருங்குணம் ..... 10
திருக்குறள் - கடவுள் வாழ்த்து - குறள் 9: ..... 11
9. கடவுள் வள்ளலாருக்குப் பயிற்றுவித்த நற்செய்கை எட்டு ..... 11
சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம் ..... 12
10. எங்ஙனம் துதித்தல்? ..... 12
11. உரை யாது ? ..... 12

சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம் ............ 12
சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம் ............ 13
சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம் ............ 13
சுத்த சன்மார்க்க சங்க சத்தியவிண்ணப்பம். ............ 13
12. பாடல் யாது ? ............ 13
#6-134-35 ஆறாம் திருமுறை / அம்பலத்தரசே ............ 14
#4-012-7 நான்காம் திருமுறை / ஆளுடைய அடிகள் அருண்மாலை ............ 14
#4-011-7 நான்காம் திருமுறை / ஆளுடைய நம்பிகள் அருண்மாலை ............ 14
#6-092-5 ஆறாம் திருமுறை / இன்பத்திறன் ............ 14
13. துதித்தல் அருள் அடையும் நெறி ............ 15
#6-092-1 ஆறாம் திருமுறை / இன்பத்திறன் ............ 15
14. இறைவன் வள்ளலாரைப் பாடப் பணித்தான் ............ 15
#6-092-3 ஆறாம் திருமுறை / இன்பத்திறன் ............ 15
#6-092-5 ஆறாம் திருமுறை / இன்பத்திறன் ............ 15
#6-110-83 ஆறாம் திருமுறை /தனித் திருஅலங்கல் ............ 16
15. இறைவன் கட்டளைப்படி வள்ளலார் பாடல்களால் துதித்தனவே திருவருட்பா ............ 16
#4-004-9 நான்காம் திருமுறை / ஆனந்த மாலை ............ 16
#4-004-10 நான்காம் திருமுறை / ஆனந்த மாலை ............ 16
#4-004-6 நான்காம் திருமுறை / ஆனந்த மாலை ............ 16
16. சன்மார்க்க சங்கத்தார் துதித்து நிற்கின்றனர் ............ 17
#6-063-2 ஆறாம் திருமுறை / திருப்பள்ளி எழுச்சி ............ 17
#6-063-8 ஆறாம் திருமுறை / திருப்பள்ளி எழுச்சி ............ 17
#6-063-5 ஆறாம் திருமுறை / திருப்பள்ளி எழுச்சி ............ 17
17. வள்ளலார் கட்டளை ............ 18
18. சன்மார்க்க வழிபாட்டின் தொடக்கம் துதித்தல். ............ 18
19. ஆன்மீக பயணத்தில் பல நிலைகளில் இருப்பவர்களும் மனம் மகிழுமாறு அருட்பா அமைந்துள்ளது ............ 18
#4-001-26 நான்காம் திருமுறை / அன்பு மாலை ............ 18
20. இறைவன் அடியார்களின் சொல் மாலையில் குலவி நிற்கின்றான் ............ 18

**#2-071-3 இரண்டாம் திருமுறை / திருவண்ணாமலைப் பதிகம்** .......... 18
**21. இறைவனை துதிக்கத் தன் வாய் துடிக்கிறதென வள்ளலார் கூறுகிறார்** ... 19
**#6-112-17 ஆறாம் திருமுறை / மெய்யருள் வியப்பு** .......... 19
**22. வள்ளலார் வாக்கின் படி** .......... 19

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# வள்ளலார் வாக்கில் துதித்தல்

## 1. துதித்தல்

**துதித்தல் = வழுத்தல், பரவுதல், ஏத்தல், வாழ்த்துதல், போற்றுதல், பரசுதல், தோத்திரம் செய்தல், புகழுதல்**

## 2. வள்ளலார் எங்கு கூறியுள்ளார்

### சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்

இயற்கை உண்மையரென்றும், இயற்கை அறிவினரென்றும், இயற்கை இன்பினரென்றும், நிர்க்குணரென்றும், சிற்குணரென்றும், நித்தியரென்றும், சத்தியரென்றும், ஏகரென்றும், அநேகரென்றும், ஆதியரென்றும், அமலரென்றும், அருட்பெருஞ்ஜோதியரென்றும், அற்புதரென்றும், நிரதிசயரென்றும், எல்லாமான வரென்றும், எல்லாமுடைய வரென்றும், எல்லாம் வல்லவரென்றும், குறிக்கப்படுதல் முதலிய அளவு கடந்த "திருக்குறிப்பு திருவார்த்தைகளாற் சுத்த சன்மார்க்க ஞானிகள்" **துதித்தும், நினைத்தும், உணர்ந்தும், புணர்ந்தும், அனுபவிக்க** விளங்குகின்ற "தனித்தலைமை பெரும் பதியாகிய பெருங்கருணை கடவுளே!"

### சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்

அறிவார் அறியும் வண்ணங்களெல்லாம் உடைய பேரருட் பெருஞ்ஜோதிப் பெருந்தகைக் கடவுளே! குமாரப் பருவத்திற்றானே உலகில் சிறுவர்களுடன் கூடி சிறுவிளையாட்டியற்றல் சிற்றுண்டிவிழைதல் சித்திரம்பயிறல் அதிசயம்பார்த்தல் அசங்கியம் பேசல் அவலித்தழுதல் சிறுசண்டை செய்தல் சிறுகுறும்பியற்றல் தன்வசத்துழலல் தாய்வயிற் சலித்தல் முதலிய குற்றங்களில் என்னை சிறிதும் செலுத்தாமல் ஒரு சிறிய அறிவு விளங்கப்

புரிந்து **இடந்தனித்திருத்தல்** இச்சையின்றி நுகர்தல் ஜெபதபஞ்செய்தல் **தெய்வம்பராவல்** பிறவுயிர்க்கிரங்கல் பெருங்குணம்பற்றல் **பாடிப்பணிதல் பத்திசெய்திருத்தல்** முதலிய நற்செய்கைகளில் என்னைச் செலுத்திய தேவரீரது பேரருட் பெருங்கருணைத் திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!

### சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்

அண்ட பிண்ட முதலிய எல்லாவற்றிற்கும் அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்கின்ற அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெரும் பதியாய பூரணரே! தேவரீர் திருவருட் சமூகத்தின் இயற்கை உண்மைத் தரத்தை அறிதல் வேண்டு மென்றும், இயற்கைப் பெருங் கருணைப் பெருந் தன்மையைக் கருதுதல் வேண்டுமென்றும், இயற்கைப் பெருங்குணப் பெரும்புகழைத் துதித்தல் வேண்டுமென்றும், எனது உள்ளகத்தே ஓவாதுறைந்து ஊற்றெழுந்து விரைந்து விரைந்து மேன்மேற் பெருகின்ற பேராசைப் பெருவெள்ளம் அணைகடந்து செல்கின்றதாகலின், "அறிவார் அறிகின்ற வண்ணங்களும் கருதுவார் கருதுகின்ற வண்ணங்களும் **துதிப்பார் துதிக்கின்ற வண்ணங்களும்** ஆகிய எல்லா வண்ணங்களையும் உடையவர் அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெருங்கடவுள்" என்ற சத்தியஞானிகளது உண்மை வாசகத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு, தன்மைசாலாத் தமியேன் அறிதற்கும் கருதுதற்கும் துதித்தற்கும் தொடங்கினேன்.

### 6-107. ஞானசரியை (வாய்பறை ஆர்த்தல்)

1. **நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே**
   **நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண்ணீரதனால் உடம்பு**
   **நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான**
   **நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று**
   **வனைந்துவனைந் தேத்துதும்நாம் வம்மின்உல கியலீர்**
   **மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்**
   **புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்**
   **பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே.**

2. **புகுந்தருணம் இதுகண்டீர் நம்மவரே நான்தான்**
   **புகல்கின்றேன் என்மொழிஓர் பொய்மொழிஎன் னாதீர்**
   **உகுந்தருணம் உற்றவரும் பெற்றவரும் பிறரும்**
   **உடைமைகளும் உலகியலும் உற்றதுணை அன்றே**

மிகுந்தசுவைக் கரும்பேசெங் கனியேகோற் றேனே
    மெய்ப்பயனே கைப்பொருளே விலையறியா மணியே
தகுந்ததனிப் பெரும்பதியே தயாநிதியே கதியே
    சத்தியமே என்றுரைமின் பத்தியொடு பணிந்தே.

3. பணிந்துபணிந் தணிந்தணிந்து பாடுமினோ உலகீர்
    பரம்பரமே சிதம்பரமே பராபரமே வரமே
துணிந்துவந்த வேதாந்த சுத்தஅனு பவமே
    துரியமுடி அனுபவமே சுத்தசித்தாந் தமதாய்த்
தணிந்தநிலைப் பெருஞ்சுகமே சமரசசன் மார்க்க
    சத்தியமே இயற்கையுண்மைத் தனிப்பதியே என்று
கணிந்துளத்தே கனிந்துநினைந் துரைத்திடில்அப் பொழுதே
    காணாத காட்சிஎலாம் கண்டுகொள லாமே.

20. குறித்துரைக்கின் றேன்இதனைக் கேண்மின் இங்கே வம்மின்
    கோணும்மனக் குரங்காலே நாணுகின்ற உலகீர்
வெறித்தஉம்மால் ஒருபயனும் வேண்டுகிலேன் எனது
    மெய்யுரையைப் பொய்யுரையாய் வேறுநினை யாதீர்
பொறித்தமதம் சமயம்எலாம் பொய்பொய்யே அவற்றில்
    புகுதாதீர் சிவம்ஒன்றே பொருள்எனக்கண் டறிமின்
செறித்திடுசிற் சபைநடத்தைத் தெரிந்துதுதித் திடுமின்
    சித்திஎலாம் இத்தினமே சத்தியம்சேர்ந் திடுமே.

## 3. ஏன் துதித்தல்

### ஆன்மாவின் சிற்றறிவால் கடவுளின் பேரறிவை அளக்க இயலாது

#### 1-005-49 மகாதேவ மாலை

பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
    புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்
    கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்
தங்கநிழல் பரப்பிமயல் சோடை யெல்லாந்
    தணிக்கின்ற தருவேபூந் தடமே ஞானச்
செங்குமுத மலரவரு மதியே எல்லாம்
    செய்யவல்ல கடவுளே தேவ தேவே.

### திருமந்திரம் / பாயிரம் / 6. அவை அடக்கம் / #95

ஆரறி வார் எங்கள் அண்ணல் பெருமையை
யாரறி வார்இந்த அகலமும் நீளமும்
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே.

### 6-003-4 அருட்பெருஞ்சோதி அட்டகம்

நசைத்தமேல் நிலைஈ தெனஉணர்ந் தாங்கே
நண்ணியும் கண்ணுறா தந்தோ
திசைத்தமா மறைகள் உயங்கின மயங்கித்
திரும்பின எனில் அதன் இயலை
இசைத்தல்எங் ஙனமோ ஐயகோ சிறிதும்
இசைத்திடு வேம்என நாவை
அசைத்திடற் கரிதென் றுணர்ந்துளோர் வழுத்தும்
அருட்பெருஞ் சோதிஎன் அரசே.

### 6-081-14 தோழிக் குரிமை கிளத்தல்

கிளக்கின்ற மறை அளவை ஆகமப் பேரளவை
கிளந்திடு மெய்ச் சாதனமாம் அளவை அறிவளவை
விளக்கும் இந்த அளவைகளைக் கொண்டு நெடுங்காலம்
மேலவர்கள் அளந்தளந்து மெலிகின்றார் ஆங்கே
அளக்கின்ற கருவி எலாம் தேய்ந்திடக் கண்டாரே
அன்றி ஒரு வாறேனும் அளவு கண்டார் இலையே
துளக்கம் உறு சிற்றறிவால் ஒருவாறென் றுரைத்தேன்
சொன்ன வெளி வரையேனும் துணிந் தளக்கப் படுமோ.

## 4. ஆதலால் "துதிப்பதுவே நலம்"

### 6-092-7 இன்பத்திறன்

விதிப்பவர்கள் பலகோடி திதிப்பவர்பல் கோடி
மேலவர்கள் ஒருகோடி விரைந்துவிரைந் துனையே
மதிப்பவர்கள் ஆகிஅவர் மதியாலே பலகால்
மதித்துமதித் தவர்மதிபெண் மதியாகி அலந்தே
துதிப்பதுவே நலம்எனக்கொண் டிற்றைவரை ஏற்ற
சொற்பொருள்கள் காணாதே சுழல்கின்றார் என்றால்

குதிப்பொழியா மனச்சிறிய குரங்கொடுழல் கின்றேன்
குறித்துரைப்பேன் என்னஉளம் கூசுகின்ற தரசே.

### திருவாசகம் / திருச்சதகம் / அறிவு உறுத்தல் / 16

**வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம் நின்பால்**
**தாழ்த்துவதும் தாம் உயர்ந்து தம்மை எல்லாம் தொழ வேண்டிக்**
**சூழ்த்த மதுகரம் முரலும் தாரோயை நாய் அடியேன்**
**பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான் யானும் உன்னைப் பரவுவனே.**

**பதப்பொருள்**:
மதுகரம் - வண்டுகள், சூழ்த்து - மொய்த்து, முரலும் - ஒலிக்கின்ற, தாரோயை - கொன்றை மாலையை யணிந்த உன்னை, வானவர்கள் - தேவர்கள், வாழ்த்துவதும் - பல்லாண்டு கூறி வாழ்த்துவதும், தாம் வாழ்வான் - தாம் நீடூழி வாழ்தற்பொருட்டே, நின்பால் - உன்னிடத்தில், மனம் தாழ்த்துவதும் - உள்ளத்தைப் பணிவிப்பதும், தாம் உயர்ந்து - தாங்கள் மேன்மை அடைந்து, தம்மை - தங்களை, எல்லாம் - பிறர் எல்லாரும், தொழ வேண்டி - வழிபட விரும்பியே, நாயடியேன் யானும் - நாய் போன்ற அடியவனாகிய யானும், பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான் - பயனற்ற பிறப்பினையொழித்திடுவதற்காக, உன்னைப் பரவுவன் - உன்னைத் துதிப்பேன்.

## 5. துதிப்பவரே அருள் பெறத் தகுதியுடையவர்

### 6-002-307 அருட்பெருஞ்ஜோதி அகவல்

**தோத்திரம் புகலேன் பாத்திர மல்லேன்**
**ஆத்திர மளித்த வருட்பெருஞ் ஜோதி**

### திருமந்திரம் / ஏழாம் தந்திரம் / 11. சிவபூசை / #1824

**வேட்டு அவி உண்ணும் விரிசடை நந்திக்குக்**
**காட்டவும் நாம் இலம் காலையும் மாலையும்**
**ஊட்டு அவி ஆவன உள்ளம் குளிர்விக்கும்**
**பாட்டு அவி காட்டுதும் பால் அவி ஆகுமே.**

## 6. துதிப்பவருக்கு என்ன தகுதி?

**துதித்தல் கருவியாகிய "நா" தூய்மையுடையதாய் இருத்தல் வேண்டும்**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்**
நாயிற் கடையேன் செய்த குற்றங்களை எல்லாம் குணங்களாகக் கொண்டு என்னுள்ளகத்தே அமர்ந்து உயிரிற் கலந்த பெருங்கருணைப் பெருமானே! தேவரீரது திருவருட்சமூகத்தின் **இயற்கைப் பெருங்குணப் புகழைத் துதித்தற்கு விரும்பிய மூர்த்திகள் முதலியோர்** துதித்தற் கருவியாய தத்தஞ் செந்நா உறுப்புகள் வாய்மைகூறல் இன்சொற்புகறல் முதலிய ஒழுக்கங்களிற் சான்றில என்று துதித்தலின்றி அச்சுற்று நிற்கின்றனர் என்று அறிஞர் உண்மை வாசகத்தால் அறிந்தேன்.

இங்ஙனம் அறிந்த கடையேன் பொய்யுரைத்தல் பயனிலகூறல் முதலிய தீமைக்கட் பயின்று தடித்த எனது நாவினால் தேவரீர் திருவருட் சமூகத்தின் இயற்கைப் பெருங்குணப் பெரும்புகழை எங்ஙனம் துதிக்கத் தொடங்குவேன்!

## 7. எதனைத் துதிப்பது ?

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்**
அண்ட பிண்ட முதலிய எல்லாவற்றிற்கும் அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்கின்ற அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெரும் பதியாய பூரணரே! தேவரீர் திருவருட் சமூகத்தின் இயற்கை உண்மைத் தரத்தை அறிதல் வேண்டு மென்றும், இயற்கைப் பெருங் கருணைப் பெருந் தன்மையைக் கருதுதல் வேண்டுமென்றும், **இயற்கைப் பெருங்குணப் பெரும்புகழைத் துதித்தல் வேண்டுமென்றும், எனது உள்ளகத்தே** ஓவாதுறைந்து ஊற்றெழுந்து விரைந்து விரைந்து மேன்மேற் பெருகின்ற பேராசைப் பெருவெள்ளம் அணைகடந்து செல்கின்றதாகலின், "அறிவார் அறிகின்ற வண்ணங்களும் கருதுவார் கருதுகின்ற வண்ணங்களும் துதிப்பார் துதிக்கின்ற வண்ணங்களும் ஆகிய எல்லா வண்ணங்களையும் உடையவர் அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெருங்கடவுள்" என்ற சத்தியஞானிகளது உண்மை வாசகத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு, தன்மைசாலாத் தமியேன் அறிதற்கும் கருதுதற்கும் துதித்தற்கும் தொடங்கினேன்.

## 8. கடவுளின் அருட்குணமே பெருங்குணம்

அவை தாம் எட்டு – எண்குணத்தான்

**திருக்குறள் - கடவுள் வாழ்த்து - குறள் 9:**
கோளில் பொறியின் குணமிலவே **எண்குணத்தான்**
தாளை வணங்காத் தலை.

**பரிமேலழகர் உரை:**
கோள் இல் பொறியின் குணம் இல = தத்தமக்கேற்ற புலன்களைக், கொள்ளையில்லாத பொறிகள்போலப், பயன் படுதலுடையவல்ல.

எண் குணத்தான் தாளை வணங்காத் தலை = எண்வகைப்பட்ட குணங்களையுடையானது தாள்களை வணங்காத தலைகள்.

எண்குணங்களாவன: தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை, எனவிவை. இவ்வாறு, சைவாகமத்துக் கூறப்பட்டது. அணிமாவை முதலாகவுடையன எனவும், கடையிலாஅறிவை முதலாகவுடையன எனவும், உரைப்பாரு முளர். காணாத கண் முதலியனபோல, வணங்காத தலைகள், பயனிலவெனத், தலைமேல் வைத்துக் கூறினார். கூறினாரேனும், இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும், அவ்வாறே பயனிலவென்பதூஉங் கொள்க. இவை மூன்று பாட்டானும், அவனை நினைத்தலும், வாழ்த்தலும், வணங்கலுஞ் செய்யா, வழிப்படுங் குற்றம், கூறப்பட்டது.

## 9. கடவுள் வள்ளலாருக்குப் பயிற்றுவித்த நற்செய்கை எட்டு

அவற்றில் "பெருங்குணம் பற்றல்" காண்க பெருவிண்ணப்பம்
- பற்றல் = மனத்தில் கொள்ளுதல்
- அருட்குணங்களால் உயிர் பெறும் இன்பம் கருதி அவற்றைப் புகழ்ந்து (வாழ்த்தித்) துதித்தல்

### சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்

அறிவார் அறியும் வண்ணங்களெல்லாம் உடைய பேரருட் பெருஞ்ஜோதிப் பெருந்தகைக் கடவுளே! குமாரப் பருவத்திற்றானே உலகில் சிறுவர்களுடன் கூடி சிறுவிளையாட்டியற்றல் சிற்றுண்டிவிழைதல் சித்திரம்பயிறல் அதிசயம்பார்த்தல் அசங்கியம் பேசல் அவலித்தழுதல் சிறுசண்டை செய்தல் சிறுகுறும்பியற்றல் தன்வசத்துழலல் தாய்வயிற் சலித்தல் முதலிய குற்றங்களில் என்னைச் சிறிதும் செலுத்தாமல் ஓர் சிறிது அறிவு விளங்கப் புரிந்து **இடந்தனித்திருத்தல் இச்சையின்றி நுகர்தல் ஜெபதபஞ்செய்தல் தெய்வம்பராவல் பிறவுயிர்க்கிரங்கல் பெருங்குணம்பற்றல் பாடிப்பணிதல் பத்திசெய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில்** என்னைச் செலுத்திய தேவரீரது பேரருட் பெருங்கருணைத் திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!

## 10. எங்ஙனம் துதித்தல்?

உரையால் = சொற்களால், சொற்தொடர்களால்
பாட்டால் = சொல் மாலையால் (...பாடிப்பணிதல் பத்தி செய்திருத்தல்...) – பெருவிண்ணப்பம்

## 11. உரை யாது ?

- திருக்குறிப்புத் திருவார்த்தைகள் - சிறுவிண்ணப்பம்

### சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்

இயற்கை உண்மையரென்றும், இயற்கை அறிவினரென்றும், இயற்கை இன்பினரென்றும், நிர்க்குணரென்றும், சிற்குணரென்றும், நித்தியெரென்றும், சத்தியரென்றும், ஏகரென்றும், அநேகரென்றும், ஆதியரென்றும், அமலரென்றும், அருட்பெருஞ்ஜோதியரென்றும், அற்புதரென்றும், நிரதிசயரென்றும், எல்லாமான வரென்றும், எல்லாமுடைய வரென்றும், எல்லாம் வல்லவரென்றும், குறிக்கப்படுதல் முதலிய அளவு கடந்த "**திருக்குறிப்பு திருவார்த்தைகளாற்** சுத்த சன்மார்க்க ஞானிகள்"

துதித்தும், நினைத்தும், உணர்ந்தும், புணர்ந்தும், அனுபவிக்க விளங்குகின்ற "தனித்தலைமை பெரும் பதியாகிய பெருங்கருணை கடவுளே!"

**சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்**
இயற்கை உண்மை நிறைவாகியுள்ள ஒரு சுத்த சிவானுபவ வெளியில், இயற்கைவிளக்க நிறைவாகி விளங்கிய அருட்பெருஞ்ஜோதி செரூபராய், இயற்கை இன்ப நிறைவாகி ஓங்கிய சிவானந்த ஒருமைத் திருநடச்செய்கையை எல்லா உயிர்களும் இன்பமடைதற் பொருட்டுத் திருவுளக்கருணையாற் செய்தருளுகின்ற சர்வ வல்லபராகிய தனித் தலைமைக் கடவுளே!

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்**
இயற்கை விளக்கம் என்கின்ற சத்திய ஞானசபைக் கண்ணே, இயற்கை உண்மை என்கின்ற சத்தியத் திருவுருவினராய், இயற்கை இன்பம் என்கின்ற சத்தியத் திருநடஞ் செய்தருள்கின்ற இயற்கைத் தனிப்பெருங்கருணைத் தனிப்பெரும்பதியாய தனித் தலைமைக் கடவுளே!

**சுத்த சன்மார்க்க சங்க சத்தியவிண்ணப்பம்.**
உத்தர ஞான சித்திபுரம் என்றும் உத்தர ஞான சிதம்பரம் என்றும் திருவருளால் ஆக்கப்பட்ட ஆக்கச் சிறப்பு பெயர்களும், பார்வதிபுரம் என்றும் வடலூர் என்றும் உலகியலாற் குறிக்கப்பட்ட குறிப்புப் பெயர்களும் பெற்று விளங்குகின்ற தெய்வப் பதியினிடத்தே, இயற்கை உண்மை நிறைவாகியுள்ள ஒரு சுத்த சிவானுபவ ஞானசபையில், இயற்கை உண்மை நிறைவாகிய திருவுருவைத் தரித்து, இயற்கை இன்ப நிறைவாகிய சிவானந்த ஒருமைத் திருநடச் செய்கையை எவ்வுயிரும் இன்பமடைதற் பொருட்டே செய்தருளுகின்ற எல்லாம் வல்ல தனித்தலைமைக் கடவுளாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே!

## 12. பாடல் யாது ?

- கடவுளருளைக் கருப்பொருளாகக் கொண்ட தமிழ்ச் செய்யுள்
- அருளாளர்களால் அருளப்பட்டவை
- இனிமையும், பொருள் அழகும், சுருங்கக் கூறுதலும், நினைவில் நிற்பனவும் முதலிய தமிழுக்கே உரித்தான சிறப்பு

**#6-134-35 ஆறாம் திருமுறை / அம்பலத்தரசே**

**அம்பலப் பாட்டே அருட்பாட்டு**
**அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு.**

**#4-012-7 நான்காம் திருமுறை / ஆளுடைய அடிகள் அருண்மாலை**

**வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை**
**நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்**
**ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.**

**#4-011-7 நான்காம் திருமுறை / ஆளுடைய நம்பிகள் அருண்மாலை**

**தேன்படிக்கும் அமுதாம்உன் திருப்பாட்டைத் தினந்தோறும்**
**நான்படிக்கும் போதென்னை நானறியேன் நாஒன்றோ**
**ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்**
**தான்படிக்கும் அனுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தனையே.**

- தேவாரம், திருவாசகம், ஆழ்வார் திருவாய் மொழி, அருணகிரி நாதர், தாயுமானவர் பாடல்கள்

**#6-092-5 ஆறாம் திருமுறை / இன்பத்திறன்**

**நண்புடையாய் என்னுடைய நாயகனே எனது**
**நல்உறவே சிற்சபையில் நடம்புரியும் தலைவா**
**எண்புடையா மறைமுடிக்கும் எட்டாநின் புகழை**
**யாதறிவேன் பாடுக என்றெனக்கேவல் இட்டாய்**
**பண்புடைநின் மெய் யன்பர் பாடிய பேரன்பில்**
**பழுத்த பழம் பாட்டில் ஒரு பாட்டும் அறியேனே**
**தண்புடை நன் மொழித்திரளும் சுவைப் பொருளும் அவைக்கே**
**தக்க இயல் இலக்கியமும் தந் தருள்வாய் எனக்கே.**

## 13. துதித்தல் அருள் அடையும் நெறி

### #6-092-1 ஆறாம் திருமுறை / இன்பத்திறன்

உலகுபுகழ் திருவமுதம் திருச்சிற்றம் பலத்தே
    உடையவர் இன்று தவினர் நான் உண்டு குறை தீர்ந்தேன்
இலகு சிவபோக வடிவாகி மகிழ் கின்றேன்
    இளைப்பறியேன் தவிப்பறியேன் இடர் செய் பசி அறியேன்
விலகல் இலாத் திருவனையீர் நீவிர் எலாம் பொசித்தே
    விரைந்து வம்மின் அம்பலத்தே விளங்கு திருக் கூத்தின்
அலகறியாத் திறம் பாடி ஆடுதும் நாம் இதுவே
    அருள் அடையும் நெறி என வேதாகமம் ஆர்ப் பனவே.

## 14. இறைவன் வள்ளலாரைப் பாடப் பணித்தான்

### #6-092-3 ஆறாம் திருமுறை / இன்பத்திறன்

அளந்திடு வேதாகமத்தின் அடியும் நடு முடியும்
    அப்புறமும் அப்பாலும் அதன் மேலும் விளங்கி
வளர்ந்திடு சிற்றம்பலத்தே வயங்கிய பேரொளியே
    மாற் றறியாப் பொன்னே என் மன்னே கண்மணியே
தளர்ந்த எனை அக்கணத்தே தளர் வொழித் தானந்தம்
    தந்த பெருந் தகையே என் தனித்த தனித் துணைவா
உளந்தரு சம்மதமான பணி இட்டாய் எனக்கே
    உன்பணியே பணியல்லால் என் பணிவே றிலையே.

### #6-092-5 ஆறாம் திருமுறை / இன்பத்திறன்

நண்புடையாய் என்னுடைய நாயகனே எனது
    நல்உறவே சிற்சபையில் நடம்புரியும் தலைவா
எண்புடையா மறைமுடிக்கும் எட்டாநின் புகழை
    யாதறிவேன் பாடுக என்றெனக்கேவல் இட்டாய்
பண்புடைநின் மெய் யன்பர் பாடிய பேரன்பில்
    பழுத்த பழம் பாட்டில் ஒரு பாட்டும் அறியேனே
தண்புடை நன் மொழித்திரளும் சுவைப் பொருளும் அவைக்கே
    தக்க இயல் இலக்கியமும் தந் தருள்வாய் எனக்கே.

#6-110-83 ஆறாம் திருமுறை /தனித் திருஅலங்கல்

ஆடியகால் மலர்களுக்கே அன்புடையார் யாவரிங்கே அவர்க்கே இன்பம்
கூடியதென் றாரணமும் ஆகமமும் ஆணையிட்டுக் கூறும்வார்த்தை
ஓடியதோ நெஞ்சேநீ உன்னுவதென் பற்பலவாய் உன்னேல் இன்னே
பாடிஅவன் திருப்பாட்டைப் படிகண்டாய் இன்புகலப் படிகண் டாயே.

## 15. இறைவன் கட்டளைப்படி வள்ளலார் பாடல்களால் துதித்தனவே திருவருட்பா

#4-004-9 நான்காம் திருமுறை / ஆனந்த மாலை

பூரணிசிற் போதைசிவ போகிசிவ யோகி
பூவையர்கள் நாயகிஜம் பூதமுந்தா னனாள்
தேரணியும் நெடுவிதித் தில்லைநக ருடையாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப
ஏரணியும் மணிமன்றில் இன்பவடி வாகி
இன்பநடம் புரிகின்ற எம்முடைய துரையே
தாரணியில் உனைப்பாடுந் தரத்தைஅடைந் தனன்என்
தன்மையெலாம் நன்மைஎனச் சம்மதித்த வாறே.

#4-004-10 நான்காம் திருமுறை / ஆனந்த மாலை

தன்னொளியில் உலகமெலாந் தாங்குகின்ற விமலை
தற்பரைஅம் பரைமாசி தம்பரைசிற் சத்தி
சின்னவய தினில்என்னை ஆளறினக் கிசைத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப
மன்னியபொன் மணிப்பொதுவில் இன்பநடம் புரிந்து
வயங்குகின்ற துரையேநின் மாகருணைத் திறத்தை
உன்னிஉவந் துணர்ந்துருகிப் பாடுகின்றேன் எங்கள்
உடையானே நின்னருளின் அடையாளம் இதுவே.

#4-004-6 நான்காம் திருமுறை / ஆனந்த மாலை

அறங்கனிந்த அருட்கொடிஎன் அம்மைஅமு தளித்தாள்
அகிலாண்ட வல்லிசிவா னந்திசௌந் தரிசீர்த்
திறங்கலந்த நாதமணிச் சிலம்பணிந்த பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப

மறங்கனிந்தார் மயக்கமெலாந் தெளியமணிப் பொதுவில்
மாநடஞ்செய் துரையேநின் வண்மைதனை அடியேன்
புறங்கவியப் பாடுகின்றேன் அகங்கவியப் பாடும்
புண்ணியரெல் லாம்இவன்ஓர் புதியன்எனக் கொளவே.

## 16. சன்மார்க்க சங்கத்தார் துதித்து நிற்கின்றனர்

### #6-063-2 ஆறாம் திருமுறை / திருப்பள்ளி எழுச்சி

துற்குண மாயைபோய்த் தொலைந்தது ஞானம்
தோன்றிடப் பொன்னொளி தோற்றிய கதிர்தான்
சிற்குண வரைமிசை உதயஞ்செய் ததுமா
சித்திகள் அடிப்பணி செய்திடச் சூழ்ந்த
நற்குணச் சன்மார்க்க சங்கத்தார் எல்லாம்
நண்ணினர் தோத்திரம் பண்ணிநிற் கின்றார்
எற்குண வளித்தஎன் அருட்பெருஞ் சோதி
என்னம்மை யேபள்ளி எழுந்தருள் வாயே.

### #6-063-8 ஆறாம் திருமுறை / திருப்பள்ளி எழுச்சி

மதம்பிடித் தவர்எல்லாம் வாய்ப்பிடிப் புண்டு
வந்துநிற் கின்றனர் வாய்திறப் பிப்பான்
கதம்பிடித் தவர்எல்லாம் கடும்பிணி யாலே
கலங்கினர் சூழ்ந்தனர் உலம்புறு கின்றார்
பதம்பிடித் தவர்எல்லாம் அம்பலப் பாட்டே
பாடினர் ஆடினர் பரவிநிற் கின்றார்
இதம்பிடித் தெனையாண்ட அருட்பெருஞ் சோதி
என்அய்ய னேபள்ளி எழுந்தருள் வாயே.

### #6-063-5 ஆறாம் திருமுறை / திருப்பள்ளி எழுச்சி

புன்மாலை இரவெலாம் புலர்ந்தது ஞானப்
பொருப்பின்மேல் பொற்கதிர் பொலிந்தது புலவோர்
சொன்மாலை தொடுத்தனர் துதித்துநிற் கின்றார்
சுத்தசன் மார்க்கசங் கத்தவர் எல்லாம்
மன்மாலை மாலையா வந்துசூழ் கின்றார்

**வானவர் நெருங்கினர் வாழிஎன் கின்றார்**
**என்மாலை அணிந்தஎன் அருட்பெருஞ் சோதி**
**என்பதி யேபள்ளி எழுந்தருள் வாயே.**

## 17. வள்ளலார் கட்டளை

ஞானசபையில் - மெல்லெனத் துதித்தல் வேண்டும்

## 18. சன்மார்க்க வழிபாட்டின் தொடக்கம் துதித்தல்.

இப்பயிற்சி தரவே வள்ளலார் "உபாசனா சாலை" என்னும் வழிபாட்டுச் சாலையை கிளைச் சாலையாக 1867ஆம் ஆண்டில் அமைத்தார்.

## 19. ஆன்மீக பயணத்தில் பல நிலைகளில் இருப்பவர்களும் மனம் மகிழுமாறு அருட்பா அமைந்துள்ளது

### #4-001-26 நான்காம் திருமுறை / அன்பு மாலை

**முன்னறியேன் பின்னறியேன் முடிபதொன்று மறியேன்**
**முன்னியுமுன் னாதும்இங்கே மொழிந்தமொழி முழுதும்**
**பன்னிலையில் செறிகின்றோர் பலரும்மனம் உவப்பப்**
**பழுதுபடா வண்ணம்அருள் பரிந்தளித்த பதியே**
**தன்னிலையில் குறைவுபடாத் தத்துவப்பேர் ஒளியே**
**தனிமன்றுள் நடம்புரியஞ் சத்தியதற் பரமே**
**இந்நிலையில் இன்னும்என்றன் மயக்கமெலாந் தவிர்த்தே**
**எனைஅடிமை கொளல்வேண்டும் இதுசமயங் காணே.**

## 20. இறைவன் அடியார்களின் சொல் மாலையில் குலவி நிற்கின்றான்

### #2-071-3 இரண்டாம் திருமுறை / திருவண்ணாமலைப் பதிகம்

**பூத்திடும் அவனும் காத்திடு பவனும் புள்விலங் குருக்கொடு நேடி**
**ஏத்திடும் முடியும் கூத்திடும் அடியும் இன்னமும் காண்கிலர் என்றும்**
**கோத்திடும் அடியர் மாலையின் அளவில் குலவினை என்றுநல் லோர்கள்**
**சாற்றிடும் அதுகேட் டுவந்தனன் நினது சந்நிதி உறஎனக் கருளே.**

## 21. இறைவனை துதிக்கத் தன் வாய் துடிக்கிறதென வள்ளலார் கூறுகிறார்

**#6-112-17 ஆறாம் திருமுறை / மெய்யருள் வியப்பு**

**தலையும் காலும் திரித்து நோக்கித் தருக்கி னேனை யே**
**தாங்கித் தெரித்த தயவை நினைக்கில் உருக்கு தூனை யே**
**புலையும் கொலையும் தவிர்ந்த நெறியில் புனிதர் மதிக்க வே**
**புகுவித் தாயை என்வாய் துடிப்பது ஏத்தித் துதிக்கவே.**
**எனக்கும் உனக்கும்**

## 22. வள்ளலார் வாக்கின் படி

சன்மார்க்கர் கடவுள் வழிபாட்டினைத் துதித்தலோடு தொடங்கலாம் அல்லவா?

**திருச்சிற்றம்பலம்**

**அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி**

**திருவருட் பிரகாச வள்ளலார் திவ்ய திருவடிகளே சரணம் ! சரணம் ! சரணம் !**

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !**
**வள்ளல் மலரடி வாழ்க வாழ்க !**